**துணுக்காய் பிரதேசசபை**
**முல்லைத்தீவு மாவட்டம்**
-----------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2015 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 செப்தெம்பர் 22 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 மே 05 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து துணுக்காய் பிரதேசசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பின்பற்றப்பட்டிருந்திருக்க வேண்டிய கணக்கீட்டுக்கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்த 05 வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கடந்த 03 ஆண்டுகளிற்கு மேலாக கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 பெறப்பட வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

இளைப்பாறிய அலுவலரொருவரிடமிருந்த அறவிடப்பட்டிருக்க வேண்டிய பதவியினர் கடன் நிலுவை ரூபா 35,607 தொடர்பில் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக அறவீடு செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளெவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

---

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிர்வாக ஒழுங்கு விதி | |
| (i) அத்தியாயம் II விதி 66 | சபையின் வருமான நிலுவைகள் ரூபா 1,856,398 இனை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |
| (ii) அத்தியாயம் III விதி 33 | மீளாய்வாண்டின் போது சோலைவரி சம்பந்தமான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii)அத்தியாயம் III விதி 59, 60 | மீளாய்வாண்டின் போது வியாபார வரி சம்பந்தமான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iv) அத்தியாயம் IV விதி 108 | துணுக்காயில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவை பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (v) அத்தியாயம் IX விதி 180 | காசு களஞ்சியம் என்பவற்றுக்குப் பொறுப்புள்ள அலுவலரிடம் பிணைப் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 10 ஒக்டோபர் 1990 ஆம் திகதிய சுற்று நிருப இல 41/90 | சபையின் 09 வாகனங்களுக்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை |
| (இ) பெறுகை வழிகாட்டி கைநூல்-2006 பிரிவு 5.4.12 | பெறுமதிசேர் வரி (VAT) சபையினால் செலுத்தப்பட்ட பின்னர் அதன் விபரங்கள் அடுத்த மாதம் 15ம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்துக்கும் அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அனுப்பப்பட்டிருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதி 571 | 02 வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்த வைப்புக்கள் ரூபா 921,780 தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |

## 2. நிதிப் பகுப்பாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி 2015 டிசம்பர் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 11,428,845 ஆக விளைந்திருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகை ரூபா 7,481,955 ஆகவும் விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 3,946,890 ஆல் அதிகரித்திருந்தமையைக் காட்டுகிறது. மீண்டுவரும் மானியங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு இதற்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது.

### 2.2 நிதிசார் பகுப்பு ரீதியான விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் தேறிய மிகையாக ரூபா 11,106,817 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாட்டின் தேறிய மிகையாக ரூபா 4,307,112 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 6,799,705 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.3 நிதி மீளாய்வு

#### 2.3.1 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா. 34,615,160 ஆக விளைந்திருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா. 23,778,019 ஆகவும் விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா. 10,837,141 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.4 வருமான முகாமைத்துவம்

#### 2.4.1 வீதவரிகள்

1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிர்வாக ஒழுங்கு விதியின் அத்தியாயம் III இனது பிரிவு 32 இன் பிரகாரம் ஆதன வரி மதிப்பீடு தொடர்பான மதிப்பீட்டுப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

#### 2.4.2 தொலைத்தொடர்பு கோபுரத்துக்கான கட்டணங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) 17.04.2009 திகதியிடப்பட்ட 1597/8 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சபையின் எல்லைக்குள் அமைக்கப்பட்டிருந்த 02 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்கல், பூர்வாங்கத்திட்டமிடல் அனுமதி, இசைவுச்சான்றிதழின் வழங்குகைகள், மேவுதல் அங்கீகாரம் ஆகிய நான்கு வகையான கட்டணங்களை மீளாய்வாண்டில் உரியவாறு அறவீடு செய்ய சபையால் நடவடிக்கைகளெவையும் மேற்கொள்ளப்பட்டிராததுடன் அத்தகைய கட்டணங்களின் கூட்டு மொத்தப் பெறுமதியும் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவுமில்லை.

(ஆ) சபை பரப்பினுள் காணப்படும் விளம்பரப் பதாகைகளிற்குரிய விளம்பரக் கட்டணங்கள் உரியவாறு அறவிடப்பட்டிருக்க நடவடிக்கைகளெவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------

### 3.1 முகாமைத்துவ பலவீனம்

------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) உள்ளுராட்சி உதவி ஆணையாளரால் சபைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டிருந்த 10 வாகனங்களினை சபைக்குரியதாக உரிமைமாற்றம் செய்யப்பட்டிருக்க நாளது வரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளெவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குரிய 14 ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013ம் ஆண்டில் UNICEF நிறுவனத்தினால் தண்ணீர் சுத்திகரிப்பு கருவி தயாரித்தலுக்கான பயிற்சி வழங்கப்பட்டு தண்ணீர் சுத்திகரிப்பு கருவி தயாரித்து கிராம மக்களுக்கு வழங்கும் திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த நன்கொடை நிதி ரூபா 916,045 பயன்பாடின்றி நானாவித வைப்புக்கணக்கில் நாளது வரை தேக்கி வைக்கப்பட்டிருந்து.

### 3.2 சொத்து முகாமைத்துவம்

-------------------------------

நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபையினது அறிக்கையும் நிதிப்பிரமாணம் 757 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் நாளதுவரை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

### 3.3 கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

--------------------------------------

மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட ரூபா. 2,672,500 பெறுமதியான 19 மூலதன வேலைத்திட்டங்கள் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது இதற்குரிய காரணங்களும் கணக்காய்வுக்கு கிடைத்திருக்கவில்லை.

### 3.4 ஒப்பந்த நிர்வாகம்

---------------------

ஒப்பந்தங்கள் நிதி திட்டமிடல் அமைச்சின் 05.01.2012 திகதியிட்ட 1/2012 இலக்க சுற்றுநிருபத்திற்கு முரணாக சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. அவ் வேலைகளின் செயன்முன்னேற்ற அறிக்கைகள் கோரப்பட்டிருந்தும் அவை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 செயற்திட்ட தாமதங்கள்

-----------------------------

மீளாய்வாண்டில் முன்னெடுக்கப்பட்டிருந்த 19 செயற்திட்டங்களின் கூட்டுமொத்த பெறுமதி ரூபா 8,245,883 இற்கான வேலைகள் நிறைவேற்றப்பட்டிராது சில்லறைக்கடன்கொடுத்தோர் கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் கணக்குகளில் செலவினமாக காட்டப்பட்டிந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதி வரை இத்தகைய வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் மேற்கோள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.6 திண்மக்கழிவு முகாமைத்துவம்.

சபையின் எல்லைப்பரப்பிலிருந்து அகற்றப்படுகின்ற குப்பை கூளங்களை எரித்தல் மற்றும் புதைத்தல் செயற்பாடுகளை மட்டுமே சபையால் மேற்கொள்வதேயன்றி கொம்பொஸ்ட் மற்றும் மீள்சுழற்சி செயற்திட்டங்களை செயற்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளெவையும் முன்னெடுக்கப்பட்டிருக்கப்படவில்லை

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்பட்டிக்காததனால் பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 80,250 தொடக்கம் ரூபா 4,074,016 வரையான வேறுபாடுகளும் மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே ரூபா 59,617 தொடக்கம் ரூபா 6,132,920 வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டிருந்தன.

### 4.2 பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான சபைக்குரிய பெறுகைத்திட்டம், மற்றும் பெறுகைக்கால அட்டவணை என்பன 2006 ம் ஆண்டு பெறுகை வழிகாட்டி கைநூலின் பிரிவு 4.2 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

சபையின் நடவடிக்கைகளை கணக்காய்வு செய்து வினைத்திறனான முறையிலும் அதன் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குமான உள்ளகக் கணக்காய்வு அலகொன்று உருவாக்கப்பட்டு மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்குப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம்

நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் 09.06.2009ம் திகதிய கணக்காய்வு முகாமைத்துவச் சுற்றுநிருப இல DMA/2009 (1) இன் பிரகாரம் சபையின் செற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டில் குறைந்தது 04 கணக்காய்வு முகாமைத்துவக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்திருக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான கூட்டமெதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(i) வருமான சேகரிப்பு

(ii) நிலையான சொத்துக்கள்

(iii) கணக்கீடு

(iv) ஆளணி

(v) வாகனங்களின் பயன்படுத்துகை

(vi) நானாவித வைப்புக்கள்

(vii) பாதீட்டுக் கட்டுப்பாடு

(viii) கையிருப்புக் கட்டுப்பாடு

(ix) பெறுகை நடைமுறை